[1970 மார்ச் 20

மத்திய அரசிடமிருந்து பெற்ற கோதுமை

*459 வினா----திரு. என். கிட்டப்பா :

திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969-70-ம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து நமது அரசுக்குக் கிடைத்த கோதுமையின் அளவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1969-ம் ஆண்டில் மத்திய அரசு 3,73,551 டன்கள் கோதுமையை நமது மாநிலத்திற்கு ஒதுக்கியது. 1970-ம் ஆண்டு மார்ச் மாதத்திற்கும் சேர்த்து மாநில அரசிற்கு 1,00,550 டன்கள் கோதுமையை மத்திய அரசு ஒதுக்கியது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அரிசியை முக்கிய உணவாகக் கொண்டுள்ள தமிழகத்தில் கோதுமையை அதிக அளவில் பரப்ப சிறப்பு மானியம், சப்சிடி வழங்குமாறு மாநில அரசு கேட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேட்டதற்கு அவர்கள் முடியாது என்று சொல்லிவிட்டார்கள். கொடுக்கவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருந்த கோதுமை நம்முடைய அரசின் முயற்சியின் காரணமாக கிராமப் புறங்களில் நிரம்ப விரும்பிச் சாப்பிடுகிறார்கள். தேவைக்கு தக்க அளவு இந்த ஆண்டு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தற்சமயம் கோதுமை கையிருப்பு செலவுக்குத் தக்க அளவிற்கு மேல் இருக்கிறது. அதுவே செலவானால் போதும் என்கிற நிலை இருக்கிறது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, கோதுமைப் பண்டங்களை சாப்பிடவேண்டும், நன்மையிருக்கிறது என்று அரசு பிரசாரம் செய்ததன் மேல், பரவலாக கோதுமையை விரும்பிச் சாப்பிடும் நிலை இருக்கிறது. அரிசிக் கட்டுப்பாடு நீக்கம் காரணமாக கோதுமை விலை ஏறியிருக்கிறதே, அந்த விலை ஏற்றத்தை இறக்க முயற்சி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, கோதுமை விலை ஏறவில்லை. கோதுமைக்கு இருந்த மானியத்தை திரும்பப் பெறுவிட்டதால், அதை விற்கவேண்டிய விலையில் விற்கப்படுகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இப்பொழுது உள்ள கோதுமை மாவுக் கோதுமை, மாவு செய்ய பயன்படுகிறது. இது தவிர சம்பா கோதுமை என்று ஒன்று இருக்கிறது, அதைப் பெற முயற்சி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இரண்டு கோதுமையும்தான் ஸ்டாக் இருக்கிறது.

திரு. கே. விநாயகம் : தமிழர்களுடைய உணவு நம்முடைய நாட்டிலே *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ, நோ. . .

திரு. கே. விநாயகம் : நான் கேள்விக்கு வருகிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது சரியில்லை. நீங்கள் சொன்னதையெல்லாம் எழுதமாட்டார்கள், எழுதவேண்டாம் . .

திரு. கே. விநாயகம் : அதையே வேறு விதமாகப் போடுகிறேன். கோதுமை உணவு தமிழர்கள் உட்கொள்ள வேண்டும் என்று கொள்கை மாற்றம் இப்பொழுது வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கோதுமையை உட்கொள்ளக் கூடாது என்று எப்பொழுதும் நாங்கள் சொல்லவில்லை. ஆகவே, இந்தப் பிரச்சினை எழவில்லை.

திருமயம் தொகுதியில் நடப்பட்ட தென்னைகள்

*460 **வின—புலவர் பொ. பொன்னம்பலம்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள திருமயம், பொன்னமராவதி, அரிமழம் ஊராட்சி ஒன்றியங்களுக்குள் அடங்கிய ஒவ்வொரு ஊராட்சி மன்றத்தின் சார்பிலும் 1962 முதல் 1966 முடிய நடப்பட்ட தென்னங்கன்றுகளுக்கான செலவு எவ்வளவு?

(இ) எத்தனை தென்னைகள் உயிரோடு இருக்கின்றன?

(உ) எத்தனை ஊராட்சி மன்றங்களில் வெறுங்கணக்கு எழுதப்பட்டு வருகிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :

(அ)	திருமயம் ஊராட்சி ஒன்றியம் ..	ரூ.	85,360·35
	பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம் ..	ரூ.	18,919·36
	அரிமழம் ஊராட்சி ஒன்றியம் ..	ரூ.	30,876·62
	மொத்தம் ..	ரூ.	135,156·33

(இ)	திருமயம் ஊராட்சி ஒன்றியம் ..	2,742 மரங்கள்
	பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம்	1,065 ,,
	அரிமழம் ஊராட்சி ஒன்றியம் ..	1,764 ,,
	மொத்தம் ..	5,571 ,,

(உ) வினாவிற்கு இடமில்லை.